இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 15.07.2026

# விஜய் செய்த களவாணித்தனங்கள்!

தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் கூட்டுக் களவாணிகள் என்று தரங்கெட்டு விமர்சனம் செய்துள்ளார் முதலமைச்சர் விஜய். அவர் பயன்படுத்தும் சொற்களுக்கு அவருக்கே அர்த்தம் தெரியுமா? அல்லது டயலாக் பேப்பரைப் போலவே புரியாமல் பேசுகிறாரா?

தேர்தலுக்கு முன்னதாகவே தி.மு.க. கூட்டணியில் இருக்கும் காங்கிரஸ் கட்சியில் சில அல்லக்கைகளைப் பிடித்து தனக்கு ஆதரவாக மாற்றி வைத்திருந்தாரே விஜய், அதுதான் களவாணித்தனம். தேர்தல் முடிந்த நாளிலேயே அந்தப் பச்சோந்திகள் நிறம் மாறி, தங்கள் குணத்தை காட்டியதே அதற்குப் பெயர்தான் களவாணித்தனம்.

**தி.மு.க. கூட்டணியில் வென்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி ஆகிய கட்சிகளோடு அறிவிக்கப்படாத பேச்சுவார்த்தையை விஜய் கட்சி நிர்வாகிகள் நடத்தினார்களே. இது தான் களவாணித்தனம்.**

**அ.தி.மு.க. கூட்டணியில் நின்று வென்ற அ.ம.மு.க. சட்டமன்ற உறுப்பினரிடம் குதிரை பேரம் நடத்தினார்களே. அதுதான் களவாணித்தனம் என்பது. அவரை முகத்தை மூடி அழைத்துச் சென்றதற்கு உண்மையான அர்த்தம்தான் களவாணித்தனம்.**

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி அதிகாரப் பூர்வமாக தனது நிலைப்பாட்டை அறிவிப்பதற்கு முன்னதாகவே, ஆளுநருக்கு கொடுத்த கடிதத்தில் முஸ்லிம் லீக் ஆதரவு என்று விஜய் கட்சி சொன்னதே களவாணித்தனம்.

**‘யார் யாரிடம் எல்லாம் பேசினார்கள், என்பதை நான் சொல்லவா?’** என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் சொன்ன போது, அவருக்கு எதிர் பதில் சொல்லாமல் இருக்கிறார்களே. அதுதான் களவாணித்தனம்.

**அ.தி.மு.க. எம்.எல்.ஏ. லீமா ரோஸ், ‘அ.தி.மு.க.வும் விஜய் கட்சியும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்’ என்று சொன்னாரே. அதுதான் களவாணித்தனத்தின் உச்சம். மே 4 ஆம் தேதியன்று தேர்தல் முடிவுகள் வந்தது. மே 5 ஆம் தேதி லீமா ரோஸ் இப்படி பேட்டி தந்தார். ஆட்சி அமைக்கும் வலிமை இல்லாத நிலையில் அ.தி.மு.க.வின் ஆதரவைப் பெறுவதற்கும் விஜய் முயற்சி செய்கிறார் என்பதை வெளிப்படையாக உடைத்தவர் லீமா ரோஸ். ‘லாட்டரி’களால் உருவாக்கப்பட்டதுதான் விஜய் கட்சி என்பது ஊருக்குத் தெரிந்த உண்மை ஆகும். களவாணித் தனத்தின் உச்சமாக அ.தி.மு.க.வின் ஆதரவுடன் முதலமைச்சர் ஆகத் துடித்தார் விஜய்.**

**அதனை அ.தி.மு.க. தலைமை ஏற்கவில்லை என்றதும்தான் அ.தி.மு.க.வை உடைக்கத் திட்டமிட்டார் விஜய். இதனை ‘கன்னக் கோல்’ வைப்பது என்பார்கள். வீடுகளின் சுவர்களைத் துளையிட அல்லது சுரங்க வழி ஏற்படுத்த திருடர்கள் பயன்படுத்தும் சிறிய இரும்புக் கம்பியை பயன்படுத்துவார்கள். அந்த மாதிரி அ.தி.மு.க. அலுவலகத்தில் கன்னக்கோல் வைத்தார் விஜய்.**

**‘8 பேருக்கு அமைச்சர் பதவி தருகிறேன்’ என்றார். ‘10 பேருக்கு வாரியம் தருகிறேன்’ என்றார்கள். இப்படித் திரட்டப்பட்டவர்கள்தான் அ.தி.மு.க.வின் 25 உறுப்பினர்கள். இவர்கள் வாக்களித்ததால்தான் விஜய் கட்சிக்கு 144 உறுப்பினர் ஆதரவு எனப் பதிவானது. இது விஜய் நடத்திய கன்னக்கோல் களவாணித்தனத்தின் உச்சம். இத்தகைய எம்.எல்.ஏ. திருட்டைச் செய்தவர்தான் விஜய். இவருக்கு அ.தி.மு.க.வை பேசுவதற்கு யோக்கியதை இருக்கிறதா?**

தன்னுடைய களவாணித்தனத்துக்கு அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பயன்படுத்திய விஜய்க்கு எதைப் பற்றி பேசுவதற்கும் யோக்கியதை இல்லை.

கொறடா உத்தரவை மீறி வாக்களித்தவர்களுக்குப் பதவி போய்விடும். அதிலும் அமைச்சர் பதவியை ஏற்றால் நிச்சயம் பதவி போய்விடும் என்பதால் அவர்களுக்கு நினைத்த மாதிரி பதவிகள் கொடுக்க முடியவில்லை. அவர்கள் மீண்டும் அ.தி.மு.க.வுக்கே வந்துவிட்டார்கள்.

இத்தோடு முடியவில்லை விஜய்யின் களவாணித்தனங்கள். அ.தி.மு.க. உறுப்பினர்களை ஒவ்வொருவராக பதவி விலக வைத்தார் விஜய். இதுவரை ஆறு பேர் விஜய்யால் ராஜினாமா செய்ய வைக்கப் பட்டுள்ளார்கள். இவை அனைத்தும் அ.தி.மு.க.வுக்குள் கன்னக்கோல் வைத்து விஜய் செய்து வரும் செயல்கள்தான். இந்த ஆறு பேரும் விசிலில் நிற்பார்களாம். கண்ணை மூடித் திறப்பதற்குள் ஜெயித்துவிடு வார்களாம். விஜய் கட்சி நடத்தவில்லை. கண்கட்டி வித்தை காட்டிக் கொண்டு இருக்கிறார்.

தனது நாற்காலிக்கு உள்ளே வந்து முட்டுக் கொடுக்கும், வெளியில் நின்று முட்டுக் கொடுக்கும் கட்சிகளை விஜய் நம்பத் தயாராக இல்லை. ‘தான் திருடி, பிறரை நம்பாள்’ என்பது பழமொழி. அதனால் தான், இவர்கள் தயவு இல்லாமல் ஆட்சி நடத்துவதற்காக அ.தி.மு.க.வுக்குள் கன்னக்கோல் நடவடிக்கைகளைத் தொடர்ந்தே வருகிறார்.

விஜய்யை நம்பி ராஜினாமா செய்தவர்களுக்கு மீண்டும் போட்டியிட வாய்ப்புத் தரப்படப் போவதுமில்லை. ‘இவை அனைத்தும் குதிரை பேரங்கள்’ என்பதால் தேர்தல் நடக்கவும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிய வில்லை.

**களவாணித்தனத்தால் ஆட்சி நடத்தி, அதையே தொடர்ந்து வரும் விஜய், தன்னைப் போலவே மற்றவர்களையும் நினைக்கிறார். வெட்கம்! வெட்கம்!!**

# கவிப்பேரரசு வைரமுத்து ‘ஞானபீட விருது’ பெற்றார்!

## ‘இலக்கியத்துக்கு பல்கலைக் கழகம் வேண்டும்!’ எனக் கோரிக்கை!

*புதுடெல்லி, ஜூலை 15-*

*இந்தியாவில் இலக்கியத்துக்கு உயர்ந்தபட்சமாக வழங்கப்படும் ஞானபீட விருது இந்த ஆண்டு கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 25ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ் மொழி பெற்றிருக்கும் மூன்றாவது ஞானபீட விருது இதுவாகும்.*

*ஜூலை 13 டெல்லியில் நடந்த விழாவில் ஒன்றிய முன்னாள் அமைச்சர் டாக்டர் கரண் சிங் விருதை வழங்கினார். ஞானபீட அமைப்பைச் சேர்ந்த சாகு அகிலேஷ் ஜெயின், ஸ்ரீ முதத் ஜெயின், பிரதீபா ராய், ஆர்.என்.திவாரி ஆகியோர் மேடையில் இருந்தனர். விருதைப் பெற்றுக் கொண்டு கவிஞர் வைரமுத்து ஏற்புரை ஆற்றினார்.*

*அப்போது அவர் பேசியதாவது :-*

*“தமிழ்நாட்டின் தென் மேற்கு மூலையில், இந்தியாவின் வரைபடத்திற்குச் சிக்காத ஒரு கடைக் கோடியில், 60 வீடுகளே கொண்ட மெட்டூர் என்ற சிற்றூரில் ஒரு விவசாயக் குடும்பத்தில் நான் பிறந்தேன். 1950களில் வைகை நதியின் குறுக்கே வைகை அணை கட்டப்பட்டது; அதன் நீர்தேங்கும் பரப்புக்காக 14 கிராமங்கள் காலி செய்யப்பட்டன. அதில் ஒன்றுதான் நான் பிறந்த ஊர்.*

*இடுப்புவரை மூழ்கிய ஊர் கழுத்துவரை மூழ்கத் தலைப்படும்போது, அந்த கிராமத்தின் தாயொருத்தி உலர்ந்த கண்ணீரோடும் நனைந்த சேலையோடும் கதறிக்கொண்டே கரையேறுகிறாள். அவள் இடுப்பில் ஒரு பெண் குழந்தை, கைப் பிடியில் ஓர் ஆண் குழந்தை. அப்போதெல்லாம் அவளுக்குத் தெரியாது இடுப்பில் உள்ள பெண்குழந்தை அடுத்த ஆறு மாதத்தில் இறந்துபோகும் என்றும், கைப்பிடியாய்க் கூட்டிவந்த ஆண்குழந்தை அடுத்த எழுபது ஆண்டுகளில் ‘ஞானபீட விருது’ பெறும் என்றும். அன்று கால்சட்டை நனைய நனையக் கரை சேர்ந்த சிறுவன்தான் இன்று இந்த ஞானபீட மேடையில் உங்கள் முன் நிற்கிறான்; அவன் பெயர் வைரமுத்து.*

*பிழைக்கவந்த வடுகபட்டியில் வகுப்பு அவனுக்கு எழுத்துக்களைச் சொல்லிக் கொடுத்தது; வறுமை அவனுக்கு வாழ்க்கையைச் சொல்லிக்கொடுத்தது. இரண்டும் அவனைக் கையோடு கூட்டிவந்து கவிதையிடம் சேர்த்தன.*

*நல்லது காண்பது இலக்கியம்; நம்பிக்கையூட்டுவது இலக்கியம். “விரும்பியது அமையாவிட்டால் அமைந்ததை விரும்பு” என்கிறது உபநிஷத். அமைந்ததை விரும்பாவிட்டால் விரும்பியதை அமை என்கிறது இலக்கியம்*

*இது 60ஆம் ஞானபீடம்.*

*என் அரைநூற்றாண்டு எழுத்துக்களைப் பாராட்டி ஞானபீடம் 60 கிராம் அமிர்தப்புட்டி வழங்கியிருக்கிறது. இது எனக்கு மட்டுமே சொந்தம் என்று உரிமைகொள்ள முடியாது. ஒரு கிராம் திருவள்ளுவருக்கு, ஒரு கிராம் இளங்கோவடிகளுக்கு, ஒரு கிராம் கம்பருக்கு, பாரதிக்கு, பாரதிதாசனுக்கு, அண்ணா, கலைஞர், கண்ணதாசனுக்கு ஆளுக்கொரு சொட்டு. அவர்களுக்கு மட்டுமா? காளிதாசனுக்கு ஒரு சொட்டு, வேதவியாசருக்கு ஒரு சொட்டு. வால்மீகிக்கு ஒரு சொட்டு, தாகூருக்கு, ஷேக்ஸ்பியருக்கு, ஃபிர்தௌசிக்கு, மில்டனுக்கு. ஷெல்லி, பைரன், கீட்ஸுக்கு, டி.எஸ்.எலியட்டுக்கு, எஸ்ராபவுண்டுக்கு கடைசியாய் ஒரு சொட்டு கலீல் ஜிப்ரானுக்கு இப்படிப் பகிர்ந்து கொடுத்தது போகக் கரண்டியில் ஒட்டியிருக்கும் ஈரப்பசை மட்டும் என் பங்கு ஆகலாம்.*

*இந்த விருது என்னை ஒரு சாய்வு நாற்காலியில் சாய்த்துவிடாது. இது ஓடி வந்த குதிரைக்கு நீட்டப்படும் புல் அல்ல; குதிரை மீது விழுந்த மற்றுமொரு சாட்டையடி. குதிரை இன்னும் வேகமெடுக்கும்; நான் வெறிகொண்டு ஓடுவேன். இந்த விருதுக்கு என் தமிழ் இன்னும் நியாயம் செய்யும்.*

*எனக்குச் சில கேள்விகள் உண்டு.*

*இலக்கியத்துக்காக இந்தியா ஒரே ஒரு நோபல் பரிசு பெற்று 113 ஆண்டுகள் கடந்துவிட்டன. அதன் பிறகு நோபல் பரிசு பெறத் தகுதியான ஒரு படைப்பாளியை இந்தியா தயாரிக்கவில்லையா? அல்லது நோபல் குழு கண்டுபிடிக்கவில்லையா? ஏகப்பட்ட உலக அழகிகளைத் தயாரித்த இந்தியா உலகக் கவிகளைத் தயாரிக்க மறந்ததா?*

*ஒவ்வொரு தொழில்நுட்பத்துக்கும் ஒவ்வொரு பல்கலைக்கழகம் காணும் நாம், இலக்கியத்துக்கு என்று தனியே ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவக் கூடாதா? அது எப்போது?*

*இந்தக் கேள்விகளோடு என் ஏற்புரையை நிறைவு செய்கிறேன். இந்த விருதுக்கு என்னைத் தகுதிப்படுத்திய ஒவ்வொரு சமூக மனிதனுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்”*

*இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து தமது ஏற்புரையில் குறிப்பிட்டார்.*



டெல்லியில் நடந்த விழாவில் 60ஆவது ஞானபீட விருது, கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு வழங்கப்பட்டது. முன்னாள் ஒன்றிய அமைச்சர் டாக்டர் கரண்சிங் விருது வழங்கினார். ஞானபீடத்தின் நிர்வாக அறங்காவலர் அகிலேஷ் ஜெயின், தேர்வுக்குழுத் தலைவர் டாக்டர் பிரதிபா ராய் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.


### கரூரில் 41 பேர் மரணத்திற்கு காரணம்

# காவல்துறைதான் என அபாண்டத்தை அள்ளி வீசுவது முதல்வருக்கு அழகா?

## சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

*நெல்லை, ஜூலை 15 -*

*உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கண்காணிப்பில் சி.பி.ஐ. விசாரணையில் இருக்கும் 41 பேர் இறந்த கரூர் சம்பவம் குறித்து பொதுவெளியில் பேசுவது இந்திய அரசியல் சட்டப்படி குற்றம் என்ற விவரம் தெரியாதவரா எங்கள் தமிழ்நாட்டின் முதல்வர்? இது பதவி பிரமாணத்திற்கு எதிரான குற்றம் என்று முதல்வருக்கு தெரியாதா? என முன்னாள் சட்டபேரவை தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.*



*இது தொடர்பாக முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:-*

*41 பேர் கொலைக்கு காரணம் காவல்துறை தான் என்ற அபாண்டத்தை அள்ளி வீசுவது முதல்வருக்கு அழகா? இதனை இருமுறை டெல்லி சி.பி.ஐ. விசாரணைக்கு சென்ற போது மேற்படி குற்றச்சாட்டை தெரிவித்தீர்களா? தமிழக முதல்வர் அரசு தலைமை செயலாளர், முதல்வரின் தனிச்செயலாளர்கள் வழி காட்டுதலோடு ஆட்சி நடத்துகிறாரா? அல்லது சினிமா தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் வழிகாட்டுதலோடு ஆணவ வசனம் பேசி வருகிறாரா?*

*சட்டமன்றத்தில் Party Fund என்று சொன்னதும் தி.மு.க.வினர் ஓடி விட்டார்கள் என்று வாய்மொழியாகவும், உடல் மொழியாகவும் நக்கலடிக்கும் CM சார் தேர்தலுக்கு முன் உங்கள் சட்டமன்ற வேட்பாளர்கள் ஒவ்வொருவரிடமும் ரூபாய் 2 கோடி முதல் ரூபாய் 10 கோடி வரை Party Fund பெற்றுக் கொண்டு தான் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதாக உங்கள் ரசிகர்களும், த.வெ.க. கட்சியினரும் புலம்புவது உங்கள் காதுகளுக்கு எட்டவில்லையா? இது Party Fund இல்லையா? இதுதான் தூய ஆட்சி இலட்சணமா?*

*இவ்வாறு முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.*



கோவை வடக்கு மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம் மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு மூங்கூரக்கவுடர் நினைவாக சி.எம்.கே. குரூப் ஆஃப் கம்பெனி 3ம் ஆண்டு பொன்விழாவில் 2026ம் ஆண்டு 10, 12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத்தொகை, நோட்புக் மற்றும் விளையாட்டு உபகரணங்களை மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கினார். இதில் ஒன்றியச் செயலாளர் சி.எம்.கிருஷ்ணகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.பி.சுப்பிரமணியம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சூரியன் தம்பி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கோபிநாத் உள்பட டி.டி.எஸ்.மூர்த்தி , ராமு, பாபு, மூத்த முன்னோடி கந்தசாமி, மோகன், சபிதா, ராஜம்மாள், சுப்பத்தாள், ஜீவா, மகேந்திரன், சம்பத், கோபால்சாமி, சடக்குட்டி, அலி பாய் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலை கிழக்கு ஒன்றிய தி.மு.க., உடுமலை கிழக்கு ஒன்றிய ஆதிதிராவிடர் நலக்குழு ஏற்பாட்டில் கோவை பிஎஸ்ஜி மருத்துவமனையுடன் இணைந்து மலையாண்டி கவுண்டனூரில் நடைபெற்ற மாபெரும் இலவச மருத்துவ முகாமை மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி துவக்கி வைத்தார். இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.ஜெயராமகிருஷ்ணன் (மடத்துக்குளம்), மு.ஜெயக்குமார் (உடுமலைப்பேட்டை), ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் யூ.சி.ஈஸ்வரசாமி, ஒன்றிய கழக நிர்வாகிகள் சுப்ரமணி, செந்திவேல், மகளிர் தொண்டரணி லதா, கிழுவன் காட்டூர் பழனிச்சாமி, ஆதிதிராவிடர் நலக்குழு சென்னியப்பன் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.